TAMIL

# வார இறுதி நாட்கள், பொது விடுமுறை நாட்கள் மற்றும் இரவு வேளைகளில்

# மருத்துவ உதவியைப் பெறும் விதம்






அவுஸ்திரேலிய மருத்துவ சேவை முறைமை மிகவும் சிக்கலானது. நீங்களோ உங்களது குடும்பத்தினரோ சுகவீனப்பட்டிருக்கும்போது, எந்த சேவையை எப்போது பயன்படுத்துவது, மற்றும் இதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைத் தெரிந்துகொள்வது சில வேளைகளில் சிரமமாக இருக்கக்கூடும். அவுஸ்திரேலிய மருத்துவ சேவை முறைமையைப் பற்றி நீங்கள் மேலும் சிறிதளவு தெரிந்துகொள்ள இந்தத் தகவல்கள் உங்களுக்கு உதவக்கூடும்.

புகலிடம் நாடும் ஒருவராக நீங்கள் விக்டோரிய மாநிலத்தில் வாழ்ந்துகொண்டிருந்தால், அவசர சிகிச்சைப் பிரிவில் நீங்கள் இலவச மருத்துவ உதவியைப் பெறலாம் என்பதைத் தயவு செய்து தெரிந்துகொள்ளுங்கள். மற்ற வகைப்பட்ட மருத்துவ சேவைக்கான உரிமங்களானவை நீங்கள் எந்த விசாவின் கீழ் இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்ததாகும். காலப் போக்கில் இவை அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும், ஆகவே தற்சமய நிலை என்ன என்பதை நீங்கள் உங்களுடைய வழக்கு முகாமையாளரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

## நீங்கள் சுகவீனமுற்றிருக்கும்போது உங்களது மருத்துவ நிலையம் மூடியிருந்தால்

**நீங்கள் சுகவீனமுற்றிருக்கும்போது ஒரு மருத்துவர் உங்களுக்கு இரவு வேளையில், வார இறுதி நாட்களில் அல்லது பொது விடுமுறை நாட்களில் தேவைப்பட்டால், கீழ் வரும் இலவச மருத்துவசேவைகளில் ஏதாவதொன்றை நீங்கள் பாவிக்கலாம்.**

**தொலைபேசி மூலமான அறிவுரைக்கு:**

- தொலைபேசி மூல தாதியர் அழைப்பு 1300 606 024 (விக்டோரிய மாநிலத்தில்)
- அலுவலக நேரத்திற்கு அப்பாற்பட்ட பொது மருத்துவர் உதவி 1800 022 222

> **“அவுஸ்திரேலியாவில், குடும்ப மருத்துவர்களை ‘பொது மருத்துவர்கள்’ (GP) என்றும் அழைப்பார்கள்.”**

**உங்களது வீட்டிற்கு வரும் மருத்துவர்களை அழைப்பதற்கு:**

உங்களுக்கென பொது மருத்துவர் ஒருவர் இருந்தால் அவர் எந்த மருத்துவ சேவை நிலையத்தில் இருக்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்:

மருத்துவ சேவை நிலையத்தின் பெயர்:

______________________________

தொலைபேசி இலக்கம்: ____________________

நீங்கள் தவறாமல் பார்க்கும் GP ஒருவர் உங்களுக்கு இல்லாமலிருந்தால்:

- ‘வீட்டு வருகை மருத்துவர்’ (The Home Doctor)

சேவையினை 13 74 25 -இல் அழையுங்கள் (விக்டோரிய மா நிலத்தில்).

**நீங்கள் ஆங்கிலம் பேசாதவராக இருந்தால், மேலேயுள்ள சேவைகளில் ஒன்றுடன் தொடர்பு கொள்ள மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்கு உதவுவார்.**

1. TIS National அமைப்பினை 13 14 50 -இல் அழைத்து மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள்.
2. நீங்கள் தொடர்புகொள்ள விரும்பும் சேவையினை அழைக்குமாறு TIS மொழிபெயர்த்துரைப்பாளரைக் கேளுங்கள்.

Produced June 2016

## மருத்துவ மனையிலுள்ள அவசரசிகிச்சைப் பிரிவு

மூச்சுத் திணறல், நிற்காத இரத்தப்போக்கு, எலும்பு முறிவுகள், தலையில் பட்ட காயங்கள் அல்லது மார்பு வலி போன்றவை ஏற்பட்டால், ஆம்புலன்ஸ் வேண்டுமெனக் கேட்டு '000' -வை அழையுங்கள், அல்லது உங்களுக்கு அண்மையிலுள்ள மருத்துவமனையின் அவசரசிகிச்சைப் பிரிவிற்குச் செல்லுங்கள். அப்படிச் செல்லும்போது, மிக நீண்ட நேரத்திற்கு நீங்கள் காத்திருக்க வேண்டியிருக்கலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

### அவசரசிகிச்சைப் பிரிவுகள் எல்லா நேரத்திலும் திறந்திருக்கும் (நாள் முழுதும் 24 மணி நேரமும், வாரம் ஏழு நாட்களும்).

**அவசரசிகிச்சைப் பிரிவிற்கு நீங்கள் செல்லும்போது:**

- உங்களிடம் இருந்தால், உங்களுடைய 'மெடிகெயர் அட்டை' அல்லது உங்களுடைய சென்ட்டர்லிங்க் 'சுகாதார கவனிப்பு அட்டை'யை எடுத்துச் செல்லுங்கள்.
- தேவைப்பட்டால், மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள்.
- சாப்பிடுவதற்கு அல்லது பானம் அருந்துவதற்கு முன்பாகப் பணியாளர்களைக் கேளுங்கள்.

பொதுத் தொலைபேசி, வீட்டுத் தொலைபேசி அல்லது பாக்கித் தொகை எதுவும் இல்லாத மொபைல் தொலைபேசி போன்ற எதுவாக இருந்தாலும் '000' -வை இலவசமாக அழைக்கலாம்.




## ஆம்புலன்ஸ்

### எவ்வொரு மருத்துவ அவசரநிலையிலும் நீங்கள் '000' -வை அழைப்பது நல்லது.

உங்களுக்கோ அல்லது மற்றொரு நபருக்கோ உடனடியாக உதவி தேவைப்படும் பெரும் சுகவீனம் அல்லது காயம் ஏற்படும்போது அது மருத்துவ அவசரநிலையாகக் கருதப்படும்.

**பின்வரும் நிலைகளில் நீங்கள் ஆம்புலன்ஸை அழைக்கக்கூடாது:**

- மிக விரைவான உதவி உங்களுக்குத் தேவைப்படாதபோது.
- அவசரநிலை அல்லாத மருத்துவ சந்திப்பு ஒன்றிற்கு நீங்கள் போக வேண்டியிருக்கும்போது.
- அவசர சிகிச்சைப் பிரிவிற்கு நீங்களாகவே போக முடியும்போது.

**ஆம்புலன்ஸ் சேவைகளுக்கு உண்மையில் அதிக செலவுகள் ஆகக்கூடும்.** கீழ் வரும் நிலைகளில் மட்டுமே ஆம்புலன்ஸ் சேவைகளுக்காக உங்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது:

- உங்களிடம் Centrelink 'சுகாதார கவனிப்பு அட்டை' இருந்தால்.
- 'ஓய்வூதியர் தள்ளுபடி' அட்டை உங்களிடம் இருந்தால்
- ஆம்புலன்ஸ் சேவையினது அங்கத்தவராக நீங்கள் இருந்தால்.
- செலவுகளை ஈடு செய்யும் தனியார் காப்பீடு உங்களுக்கு இருந்தால்.

**மற்ற அனைவரிடமிருந்தும் இதற்கான கட்டணம் வசூலிக்கப்படும், மற்றும் 'மெடிகெயர்' இதற்காகப் பணம் செலுத்தாது.**




We gratefully acknowledge the financial support of North Western Melbourne Primary Health Network to produce this resource, and the document 'Using health services in the ACT' produced by the ACT government which helped inform this resource.

phn NORTH WESTERN MELBOURNE
An Australian Government Initiative

centre for culture, ethnicity &health